www.freetnbooks.com

T

Reg. No.: | | | | | | |

# அரையாண்டுப் பொதுத் தேர்வு - 2025

## வகுப்பு - 10

காலம் : 3.00 மணி　　　　சமூக அறிவியல்　　　　மதிப்பெண்கள்:100

I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.　　　　**14 x 1 = 14**

1. ஹிட்லரோடு மியூனிச் உடன்படிக்கையில் கையெழுத்திட்ட பிரிட்டன் பிரதமர் யார்?
அ) சேம்பர்லின்　　ஆ) வின்ஸ்டன் சர்ச்சில்　　இ) லாயிட் ஜார்ஜ்
ஈ) ஸ்டேன்லி பால்டுவின்

2. பத்தொன்பதாம் நூற்றாண்டு முடிவடையும் தருவாயில் கிழக்கு ஆசியாவில் உதயமான வலிமை வாய்ந்த நாடு எது?
அ) சீனா　　ஆ) ஜப்பான்　　இ) கொரியா　　ஈ) மங்கோலியா

3. விதவை மறுமணச் சங்கத்தை ஏற்படுத்தியவர் ........
அ) மகாதேவ் கோவிந்த் ரானடே　　ஆ) தேவேந்திரநாத் தாகூர்
இ) ஜோதிபா பூலே　　ஈ) அய்யன்காளி

4. வடக்கு மற்றும் தெற்கு வியட்நாம் எந்த ஆண்டு ஒன்று சேர்க்கப்பட்டது?
அ) 1975　　ஆ) 1976　　இ) 1973　　ஈ) 1974

5. சோட்டா நாக்பூர் குத்தகைச் சட்டம் எந்த பின்னணியில் நிறைவேற்றப்பட்டது?
அ) கோல் கிளர்ச்சி　　ஆ) இண்டிகோ கிளர்ச்சி　　இ) முண்டா கிளர்ச்சி
ஈ) தக்காண கலவரங்கள்

6. பின்னடையும் பருவக்காற்று .......... லிருந்து ஈரபதத்தை எடுத்துக்கொள்கிறது.
அ) அரபிக் கடல்　　ஆ) வங்கக்கடல்　　இ) இந்தியப்பெருங்கடல்
ஈ) தைமூர்க் கடல்

7. .......... என்பது ஒரு வாணிபப் பயிர்.
அ) பருத்தி　　ஆ) கோதுமை　　இ) அரிசி　　ஈ) மக்காச்சோளம்

8. இந்தியாவின் முதல் மக்கள் தொகை கணக்கெடுப்பு .......... ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்டது.
அ) 1991　　ஆ) 1881　　இ) 1872　　ஈ) 2011

9. தமிழ்நாட்டின் மிகப் பெரிய நீர்மின்சக்தி திட்டம் .........
அ) மேட்டூர்　　ஆ) பாபநாசம்　　இ) சாத்தனூர்　　ஈ) துங்கபத்ரா

10. இந்தியாவின் முக்கிய இறக்குமதிப் பொருள்
அ) சிமெண்ட்　　ஆ) ஆபரணங்கள்　　இ) தேயிலை　　ஈ) பெட்ரோலியம்

11. கீழ்காணும் மாநிலங்களில் எந்த ஒன்று ஈரவை சட்டமன்றத்தைப் பெற்றிருக்கவில்லை?
அ) ஆந்திரபிரதேசம்　　ஆ) தெலுங்கானா　　இ) தமிழ்நாடு　　ஈ) உத்திரப்பிரதேசம்

12. மக்மகான் எல்லைக்கோடு எந்த இரு நாடுகளுக்கும் இடையே உள்ள எல்லை ஆகும்?
அ) இந்தியா-பர்மா　　ஆ) இந்தியா நேபாளம்　　இ) இந்தியா-சீனா　　ஈ) இந்தியா-பூடான்

13. GST பற்றி கீழ்க்கண்ட கூற்றுகளில் எது சரியானது?
i) GST ஒரு முனைவரி
ii) இது மத்திய மற்றும் மாநில அரசாங்கங்களால் பொருட்கள் மற்றும் சேவைகளுக்கு விதிக்கப்படும் அனைத்து நேரடி வரிகளையும் மாற்றுவதை நோக்கமாக கொண்டுள்ளது.
iii) இது ஜூலை 1, 2017 முதல் நாடு முழுவதும் அமுல்படுத்தப்பட்டது
iv) இது இந்தியாவில் வரிகட்டமைப்பை ஒன்றிணைக்கும்
அ) i மற்றும் ii சரி　　ஆ) ii, iii மற்றும் iv சரி　　இ) i, iii மற்றும் iv சரி
ஈ) மேற்கூறிய அனைத்தும் சரியானவை

14. ......... இல் ஒரு வெற்றிகரமான தொழில்துறை தொகுப்பு முற்றிலும் தமிழ்நாட்டில் உருவாக்கப்பட்டது.
அ) ஒசூர்　　ஆ) திண்டுக்கல்　　இ) கோவில்பட்டி　　ஈ) திருநெல்வேலி

II. ஏதேனும் 10 வினாவிற்கு குறுகிய விடையளி. (வினா எண் 28 கட்டாய வினா) **10 x 2 = 20**

15. முத்து துறைமுக நிகழ்வைப் பற்றி எழுதுக.

16. பாளையக்காரர்களின் கடமைகள் யாவை?

www.freetnbooks.com | FREETNBOOKS Scanned with Cam

www.freetnbooks.com



பெரியாரை ஒரு பெண்ணியவாதியாக மதிப்பிடுக.

18. வாரிசு இழப்புக் கொள்கையின் அடிப்படையில் பிரிட்டிஷ் அரசில் இணைத்துக் கொள்ளப்பட்ட பகுதிகளை பட்டியலிடவும்.
19. திருநெல்வேலி எழுச்சி பற்றி ஒரு குறிப்பு வரைக.
20. தக்காண பீடபூமி - சிறுகுறிப்பு வரைக.
21. பருவமழை வெடிப்பு என்றால் என்ன?
22. தமிழ்நாட்டின் முக்கிய தீவுகளைக் குறிப்பிடுக.
23. இடப்பெயர்வு என்றால் என்ன? அதன் வகைகளைக் குறிப்பிடுக.
24. பறக்கும் தொடருந்து திட்டம் (MRTS) என்றால் என்ன?
25. இந்தியக் குடியரசுத் தலைவர் எவ்வாறு தேர்ந்தெடுக்கப்படுகிறார்?
26. இந்தியாவின் அண்டை நாடுகளின் பெயர்களை எழுதுக.
27. பசுமைப் புரட்சியின் விளைவுகள் என்ன?
28. SIPCOT பற்றி குறிப்பு எழுதுக.

III. எவையேனும் பத்து வினாக்களுக்கு விடையளி. (வினா எண் 42 கட்டாய வினா)

**10 x 5 = 50**

29. கோடிட்ட இடத்தை நிரப்புக.
    1) இந்தியாவின் முதல் பெண் சட்டமன்ற உறுப்பினர் ........ ஆவார்.
    2) காந்தியடிகளின் அரசியல் குரு ....... ஆவார்.
    3) ........ தமிழ்நாட்டின் மாநில விலங்கு ஆகும்.
    4) மாநிலங்கள் அவை உறுப்பினர்களின் பதவிகாலம் .......... ஆண்டுகளாகும்.
    5) இந்தியாவில் .......... துறை முதன்மைத் துறையாகும்.
30. இரண்டாம் உலகப் போரின் விளைவுகளை ஆய்வு செய்க.
31. சட்டமறுப்பு இயக்கத்தில் தமிழ்நாடு வகுத்த பங்கினை விவரி.
32. அ) வேறுபடுத்துக.
    1) வடகிழக்கு பருவக்காற்று மற்றும் தென்மேற்கு பருவக்காற்று
    2) புதுப்பிக்க இயலும் மற்றும் புதுப்பிக்க இயலா வளங்கள்

    ஆ) காரணம் கூறுக.

    மலை பகுதிகள் சமவெளிகளை விட குளிரானவை.
33. தீபகற்ப ஆறுகளைப் பற்றி விவரிக்கவும்.
34. இந்திய அரசியலமைப்பின் சிறப்புக்கூறுகளை விளக்குக.
35. இந்தியாவில் உள்ள பருத்தி நெசவாலையின் பரவல் பற்றி கூறுக.
36. 1857 ஆம் ஆண்டின் பெரும் புரட்சிக்கான காரணங்கள் குறித்து ஆராயவும்.
37. நாட்டு வருமானத்தை கணக்கிடுவதற்கு தொடர்புடைய பல்வேறு கருத்துக்களை விவரி.
38. வரி என்றால் என்ன? அதன் வகைகளை விவரிக்கவும்.
39. வெளியுறவுக் கொள்கையை நிர்ணயிக்கும் அடிப்படைக் காரணிகள் யாவை?
40. அடிப்படை உரிமைகளைக் குறிப்பிடுக.
41. 1910 முதல் 1940 வரையிலான ஆண்டுகளுக்கான ஏதேனும் ஐந்து இந்திய நிகழ்வுகளை காலக்கோட்டில் எழுதுக.
42. உலக வரைபடத்தில் பின்வரும் இடங்களை குறிக்கவும்.
    1) இத்தாலி 2) துருக்கி 3) நாகசாகி 4) சான்பிரான்சிஸ்கோ 5) செர்பியா

IV. பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்கவும். **2 x 8 = 16**

43. அ) முதல் உலகப்போருக்கான முக்கிய காரணங்களை விவரிக்கவும். (அல்லது)

    ஆ) நீதிக்கட்சியின் தோற்றத்திற்கான பின்புலத்தை விளக்கி சமூக நீதிக்கான அதன் பங்களிப்பைச் சுட்டிக் காட்டவும்.
44. அ) கொடுக்கப்பட்டுள்ள இந்திய வரைபடத்தில் கீழ்க்காணும் இடங்களைக் குறிக்கவும்.
    1) காரகோரம் 2) கங்கை ஆறு 3) அதிக மழைபெறும் பகுதி 4) பாலை மண்
    5) பன்னா உயிர்க்கோள பெட்டகம் 6) மேட்டூர் அணை 7) பன்னாட்டு விமான நிலையம் (ஒன்று) 8) மன்னார் வளைகுடா (அல்லது)

ஆ) கொடுக்கப்பட்டுள்ள தமிழ்நாடு வரைபடத்தில் கீழ்காணும் இடங்களை குறிக்கவும்.
    1) காவிரி ஆறு 2) நீலகிரி 3) கோவளம் 4) பழவேற்காடு ஏரி 5) சென்னை
    6) விமான நிலையம் (ஒன்று) 7) நிலக்கரி கிடைக்குமிடம் (ஒன்று)
    8) இந்தியப் பெருங்கடல்

www.freetnbooks.com | FREETNBOOKS Scanned with Cam